**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**OS 135/2016**

**25.07.2023**

**வா.சா.1 தனபால் த/பெ.ஆறுமுகம் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கு தாக்கல் செய்தவர் எனது மனைவி ஆவார். பிரதிவாதி வசந்தா எனது வீட்டின் தெற்புறம் உள்ளார். நான் குடியிருக்கும் வீட்டின் கதவிலக்கம் 7, மேலவிலழ்கார தெருவில் உள்ள ஓட்டு வீடு ஆகும். அதை வாடகைக்கு விட்டுள்ளேன். பிரதிவாதி கதவிலக்கம் 6ல் வசித்து வருகிறார். அவர் வசிக்கும் வீடு மாடி வீடு ஆகும். இரு வீடுகளும் கிழக்கு பார்த்த வாசல் உள்ள வீடுகளாகும். வீடுகள் கிழக்கு மேற்கு திசையில் உள்ளது. ரோடு தெற்கு வடக்கில் உள்ளது. 6ம் நம்பர் வீட்டிற்கும் மற்றும் 7ம் நம்பர் வீட்டிற்கும் இடையில் தற்போது கான்கீரீட் சுவர் உள்ளது. அந்த சுவர் வாசல் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி 20 அடி வரை உள்ளது. அதற்கு பின்னர் இரும்பு மற்றும் முள்வேலி மற்றும் குட்டி காம்பவுண்ட் உள்ளது. தாவா சொத்து சர்வே எண்.392ற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் ஏ ஷெட்யூல் மற்றும் பி ஷெட்யூல் என்று இரண்டு ஷெட்யூல்கள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஏ ஷெட்யூல்-ல் சர்வே எண்.391/1, 392/2, 392 ஆகிய எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.391/1, 392/2, 392 ஆகிய எண்களுக்கு மொத்தமாக 6,728 சதுரடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். குறிப்பிட்டு சர்வே எண்களில் எவ்வளவு சதுரடி உள்ளது என்று எனக்கு தெரியாது. பி ஷெட்யூல்-ல் சர்வே எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி ஷெட்யூல்-ல் 280 சதுரடி பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளார் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த 280 சதுரடியை நீதிமன்றத்தின் மூலம் வசப்படுத்தி ஒப்படைக்க வேண்டும் என்று கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனவே 280 சதுரடி இன்றைய தேதியில் பிரதிவாதி வசம் உள்ளது என்றால் சரிதான். நானும் என் மனைவியும் இருவரும் சேர்ந்து தான் வழக்கு விவரம் வழக்கறிஞரிடம் கூறினோம். நீதிமன்றத்தின் மூலம் ஆணையர் நியமனம் செய்து அளவீடுகள் செய்து தாக்கல் செய்த அறிக்கைக்கு ஆட்சேபணை செய்தீர்களா என்றால் இல்லை. 143 சதுரடி மட்டும் தான் ஆக்கிரமனம் என்று நீதிமன்ற ஆணையர் அறிக்கை அளித்தார் என்றால் சரிதான். அதாவது தெற்கு வடக்கில் 1/2 மீட்டர் என்றும், கிழக்கு மேற்கில் 51.4 மீட்டர் என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆகவே 143 சதுரடி மட்டும் தான் ஆக்கிரமனம்

என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு பின்னர் வழக்குரையை நான் திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 143 சதுரடி என்பது சரியா 280 சதுரடி ஆக்கிரமனம் என்பது சரியா என்றால் 143 சதுரடி என்பது தான் சரி. 143 சதுரடி என்பதற்கு வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. 143 சதுரடி கிடைத்தால் போதும் என்றால் சரிதான். 280 சதுரடிக்கு வழக்கு நடத்துவது சரியா தவறா என்றால் தற்போது அதுக்குறித்து எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தின் மூலம் பி ஷெட்யூல்–ல் உள்ள 280 சதுரடிக்கு பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். குறிப்பிட்டு எந்த சர்வே எண்ணில் ஆக்கிரமனம் செய்யப்பட்டுள்ளது என்றால் 3 சர்வே எண்களில் ஒன்றில் தான் ஆக்கிரமனம் செய்துள்ளார். சர்வே எண்.392 ல் ஆக்கிரமணம் செய்துள்ளார்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**